செய்தி வெளியீடு எண். 44-2017 நாள்: 15.11.2017

# விழுப்புரம் மாவட்டம் தாட்கோ திட்டங்களில் பயன்பெற தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

*****

தாட்கோ மூலம் ஆதிதிராவிடர்களுக்காக செயல்படுத்தப்படும் பொருளாதார மேம்பாட்டு திட்டங்களுக்கு தகுதியும் விருப்பமும் உள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து இணையதளம் (Online) மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. வயது வரம்பு 18 முதல் 65 வரை. குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.1.00 இலட்சம் ஆகும்.

நிலம் வாங்கும் திட்டம், நிலம் மேம்பாடு திட்டம், துரித மின் இணைப்பு திட்டம், தொழில் முனைவோர் திட்டம் (பெட்ரோல், டீசல் எரிவாயு சில்லரை விற்பனை நிலையம் அமைத்தல், தொழில் முனைவோர் திட்டம்), இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம், மருத்துவமையம், மருந்தியல், கண் கண்ணாடியகம், முடநீக்குமையம், இரத்தபரிசோதனை நிலையம் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல், சுய உதவிக் குழுக்களுக்கான சுழல்நிதி, சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார கடனுதவி மானியம் திட்டத்தொகையில் 50%, மாவட்ட ஆட்சியர் விருப்புரிமைநிதி, மேலாண்மை இயக்குநர் விருப்புரிமைநிதி, தாட்கோ தலைவர் விருப்புரிமைநிதி, இந்திய குடிமைப்பணி முதன்மைத்தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி, சட்டப்பட்டதாரிகளுக்கு நிதியுதவி, தமிழ்நாடு தேர்வாணையத் தொகுதி-1 முதல் நிலை தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு நிதியுதவி, பட்டயக் கணக்கர்/ செலவுகணக்கர்/ நிறுவன செயலர்களுக்கு நிதியுதவி, தொழில் தையல்கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி போன்ற திட்டங்களுக்கு தகுதியும் விருப்பமும் உள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து இணையதளம் (Online) மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தாட்கோ இணையதள முகவரி http://application.tahdco.com மூலமாக விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்தோ/ நகலினையோ, கைப்பிரதி விண்ணப்பங்களையோ சமர்ப்பிக்க வேண்டியதில்லை. விண்ணப்பிக்குபோது விண்ணப்பதாரர் பற்றிய முழு விவரங்கள், புகைப்படம், இருப்பிடச் சான்றிதழ் எண், சாதிச்சான்றிதழ் எண். (எண், வழங்கப்பட்டநாள், வழங்கியவர் மற்றும் வழங்கப்பட்ட அலுவலகம்), குடும்ப வருமான சான்றிதழ் எண். (எண், வழங்கப்பட்ட நாள், வழங்கப்படுவதற்கான காரணம் - நேர்காணல் நடத்தப்படும் தேதிக்கு 1½ ஆண்டுகள் முன்பு வரை வருமானச்சான்று பெற்றிருக்கலாம். அதாவது வருமானச் சான்றின் வயது 1½ ஆண்டு வரை இருக்கலாம்.), பட்டா/சிட்டா – (நிலம் வாங்குதல் மற்றும் நிலம் மேம்பாடு திட்டம்), குடும்ப அட்டை எண், ஆதார் எண், விண்ணப்பதாரரின் தொலைபேசி/ கைபேசி எண், விண்ணப்பதாரரின் மின்னஞ்சல் முகவரி, திட்டங்களின் விவரங்கள் முதலியவற்றை இணைய தளத்தில் கண்டிப்பாக பதிவு செய்ய வேண்டும். தொலைபேசி/ கைபேசி எண். மற்றும் மின்னஞ்சல் முகவரி இல்லாதவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படும். மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் தவிர, திட்டங்களுக்கு ஏற்றாற்போல் தேவைப்படும் ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் பெறுவதற்கு அறிவிக்கப்பட்ட நாட்களில் 24 மணிநேரமும் பதிவு செய்யலாம். மேலும், இணையதளம் மூலம் விண்ணப்பிக்க உதவி தேவைப்படுபவர்களின் வசதிக்காக தாட்கோ மாவட்ட மேலாளர் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் மட்டம் ரூ.20/- செலுத்தி விண்ணப்பிக்கும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.